24th September 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) Private visit.

(c) Yes.

(d) Yes. The complaint was examined and it was found baseless. A reply was sent to the complainant in respect of his complaint.

SRI M. KALYANASUNDARAM : கலெக்டர் முன் அனுமதி பெற்று போயிருக்கிறார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார். அப்படியானால் அவர் எந்தத் தேதிக்கு வந்தார் ? நான் சொல்ல விரும்புவது, சர்க்கார் ஒப்புக்குத்தான் விசாரணை நடத்தியிருக்கிறார்களா என்பதுதான். துர்அதிர்ஷ்டவசமாக அந்த 'சீப் செக்ரடரி' இப்பொழுது சர்விஸில் இல்லை. அன்றைய தினம் அவருக்கு தந்தி கிடைத்த பிறகுதான் சீப் செக்ரடரி கலெக்டருக்குத் தெரியப்படுத்தி அவர் போய் வந்த பிறகு அவருக்கு முன் தேதி போட்டு அனுமதி கொடுத்திருப்பதாக என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அதை சர்க்கார் விசாரணை செய்யத் தயாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினரிடம் ஆதாரம் ஏதாவது இருந்தால் அதை என்னிடம் கொடுத்தால் விசாரணை செய்கிறேன். என்னிடமிருக்கிற தகவல்களிலிருந்து அவர் போவதற்கு முன்னால் ' காஷுவல் ' லீவ் போட்டு முன் அனுமதிப் பெற்றுத் தான் போனார் என்று தெரியவருகிறது.

SRI M. KALYANASUNDARAM : கலெக்டர் அனுப்பிய டூர் புரோகிருமின்படி அந்தத் தேதியில் பரமக்குடியில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தேதியில் பரமக்குடியில் மற்ற உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். ஆனால் கலெக்டர் மட்டும் அந்தத் தேதியில் இருக்கவில்லை. தந்தி போனபிறகு சீப் செக்ரடரி கலெக்டருக்குத் தகவல் கொடுத்து முந்திய தேதி போட்டு கடிதம் வாங்கி 'காஷுவல்' லீவ் சாங்ஷன் செய்யப்பட்டு அனுமதியும் கொடுக்கப்பட்டது என்கிற விஷயம் சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The information I have is this : The Collector sent the usual intimation to the Chief Secretary that he would be going to Colombo on casual leave on the 16th and 17th March to bring his sister-in-law from Colombo. From the information with me, it is seen that the intimation was sent to the Chief Secretary even earlier that he would be proceeding to Colombo. If the hon. Member has with him any other information, he may pass it on to us and the Government would go into it and make an enquiry.

Tripartite Enquiry Committee's recommendation on Cement industry

* 2462 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state with reference to the answer given to question No. 1203 on 9th March 1955 whether the Government have communicated the recommendation of the Tripartite Enquiry Committee for Cement Industry to the Central Government for implementing them? 9-30 a.m.

[24th September 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. A copy of the report of the Tripartite Enquiry Committee on Cement Industry has, however, been forwarded to the Government of India for consideration by the Central Wages (Standardization) Board.

SRI M. PALANIYANDI : கனம் மந்திரி அவர்கள் அரசாங்கத்துக்கு முக்கூட்டுக் கமிட்டியின் சிபார்சுகளை அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள். சென்னை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட முக்கூட்டுக் கமிட்டி, நாம் கொடுத்த விஷயங்களை நன்றாகப் பரிசீலனை செய்து ஒரு சாதாரண ரிபோர்ட் கொடுத்திருக்கிறது. மத்ய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கமிட்டி மூன்று விஷயங்களைப் பற்றிதான் பரிசீலனை செய்கிறது. ஆகையினால் சென்னை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட முக்கூட்டுக் கமிட்டியின் சிபார்சுகளை அமுலாக்குவதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Industrial Committee on cement which held its sitting in March 1954 recommended that the report of the Tripartite Enquiry Committee on cement industry set up by the State Government might first be considered by the Central Wages (Standardisation) Board. The recommendations of the Tripartite Enquiry Committee on cement have accordingly been forwarded to the Central Wages (Standardization) Board. As soon as its reactions are received, the Government will take necessary action.

Government Press Sales Depot

* 2463 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance and Education be pleased to state—

(a) the number of Government Publications that are out of stock in the Government Press Sales Depot at Mount Road; and

(b) the steps taken to reprint them?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Twenty-seven publications are out of stock in the Government Press Sales Depot at Mount Road.

(b) Fourteen of them are under reprinting and the question of reprinting the rest of the publications is under consideration.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Sir, is it not a fact that a large number out of the 27 publications which are out of stock in the Government Press Sales Depot mainly relate to education, for example, grants-in-aid code, provident fund rules, etc., and if so, will the Government see that they are published without any delay?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, steps are being taken to reprint all the books which are out of stock.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the City Municipal Act, which has become almost obsolete, has not been reprinted and copies of it are not being supplied to the city councillors who are elected every three years?